# புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
# சுற்றாடல் அமைச்சு

## வெற்றிடங்கள்

1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கணிய வளங்கள் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. ஆராய்ச்சி உதவியாளர் (MA2-2) Research Assistant (MA2-2)
2. வலையமைப்பு / வன்பொருள் தொழிநுட்ப உதவியாளர் (Network / Hardware Technical Assistant) (MA2-2)

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்-**

**1. ஆராய்ச்சி உதவியாளர் (MA2-2)**

**வெளி விண்ணப்பதாரிகள்**

**தொழிற் தகைமை**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஆராய்ச்சிப் பணித் துறைக்கு பொருத்தமான, தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) நிலை-5 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

**தொழிற் தகைமை**

மேலே குறிப்பிட்டுள்ளபடி வெளி விண்ணப்பதாரர்கள் தேவைப்படுத்தப்படும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**2. வலையமைப்பு / வன்பொருள் தொழிநுட்ப உதவியாளர் (Network / Hardware Technical Assistant) (MA2-2)**

**வெளி விண்ணப்பதாரிகள்**

**தொழிற் தகைமை**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தகவல் தொழிநுட்பத் துறைக்கு பொருத்தமான, தேசிய தொழிற்கல்வி தகுதி (NVQ) நிலை-5 க்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்**

**தொழிற் தகைமை**

மேலே குறிப்பிட்டுள்ளபடி வெளி விண்ணப்பதாரர்கள் தேவைப்படுத்தப்படும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படியாகும்.**

MA2-2 Rs.50540-540x10-630x7-1080x4-1280x20-90270 + வாழ்க்கைச் செலவுப் படிகள் மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

(இருப்பினும், 01.01.2027 வரை அனைத்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான ஊதியம் 01/2025ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி இருக்க வேண்டும்.

**வயது வரம்பு:**

வயது 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு ஏற்படையதாகாது.

**பதவிகளுக்கு ஏற்புடைய பொதுவான நிபந்தனைகள்:**

1. அனைத்து விண்ணப்பதாரிகளும்
    - இலங்கை பிரஜையாக இருக்க வேண்டும்
    - பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றவும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்
    - சிறந்த ஒழுக்கப்பண்புடையவராக இருக்க வேண்டும்.
2. அரசாங்க கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும்.
3. விண்ணப்பதாரரின் சரிபார்ப்புகளைப் பெற விண்ணப்பத்தில் இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி எண்கள் குறிப்பிடப்பட வேண்டும்.
4. கல்வி மற்றும் பிற சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
5. தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமேநேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்

- ➢ தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்கள் சம்பளத்தில் 10% ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிக்க வேண்டும். பணியகம் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) மேலதிகமாக 3% வழங்கும்.
- ➢ ஏனைய நன்மைகள்
    - மருத்துவமனை மருத்துவ காப்புறுதித் திட்டத்திற்கான உரிமை
    - வெளிநோயாளர் மருத்துவ பட்டியல்களை மீளப்பெறுவதற்கான உரிமை.
    - அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

விண்ணப்பிக்கும் பதவி விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பம் 2025.11.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவு தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம் (பதிற்கடமை)**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்**
**இல, 569, எபிடமுல்ல வீதி,**
**பிட்டகோட்டே.**